பக்கங்கள் 17+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆனி 31 செவ்வாய்க்கிழமை 15.07.2025 | அதிர்வு 339

## ஒலுவில் பல்கலையில் தாக்குதல்

## நான்கு மாணவர்கள் உட்பட ஐவர் வைத்தியசாலையில்

(பாறுக் ஷிஹான்)

ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீட முதலாம் வருட மாணவர்கள் மீது சிரேஷ்ட 04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




### காணி விடுவிப்பை வலியுறுத்தி

# வடக்கு மக்கள் கொழும்பில் போராட்டம்!

வடக்கில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள் கொழும்பில் இன்று ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். வலிகாமம் வடக்கின் காணி உரிமையாளர்களுடன் வடக்கு மாகாணத்தில் படையினர் வசமுள்ள காணிகளின் உரிமையாளர்களும் இணைந்து அமைதியான முறையில் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். 04▶







# கால்வாயில் கவிழ்ந்தது கார்! இருவர் பரிதாப உயிரிழப்பு!!

மஹியங்கனை – பதுளை பிரதான வீதியில் பயணித்த கார் ஒன்று மஹியங்கனை 17 ஆவது மைல்கல்லுக்கு அருகில் வியன கால்வாயினுள் கவிழ்ந்ததில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் இன்று காலை 6:50 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மஹியங்கனைப் பொலிஸ் பயிற்சி பாடசாலையின் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து கால்வாயில் கால்வாயில் கவிழ்ந்த காரை மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட வாகனத்தின் உள்ளே இருவர் இருந்துள்ளனர்.

அவர்கள் உடனடியாக அம்புலன்ஸ் மூலம் மஹியங்கனை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும், அனுமதிக்கப்பட்ட நேரத்தில் இருவரும் உயிரிழந்துவிட்டனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உயிரிழந்த இருவரும் மொனராகலை, ஒக்கம்பிட்டியவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மஹியங்கனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



### மேலாடை இன்றி நிர்வாணமாக வீதியில் நடந்த

# வெளிநாட்டுப் பெண்ணொருவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

அம்பாறை, பொத்துவில் அறுகம் குடா சுற்றுலா தளத்தில் மேலாடை இன்றி நிர்வாணமாக வீதியில் நடந்து சென்ற குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்ட வெளிநாட்டுப் பெண் ஒருவருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு மாதச் சிறைத்தண்டனையை விதித்து பொத்துவில் நீதிவான் நீதிமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை விதித்துள்ளது.

26 வயதுடைய தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண்ணுக்கே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வெளிநாட்டுப் பெண் அறுகம் குடா சுற்றுலா தளத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இருந்து மற்றுமொரு ஹோட்டலுக்கு நேற்று திங்கட்கிழமை பிற்பகல் மேலாடை இன்றி நிர்வாணமாக நடந்து சென்றுள்ளார்.

இது தொடர்பில் பொத்துவில் பொலிஸ் மகளிர் பணியகத்துக்குக் கிடைத்த தகவலின் பேரில் சந்தேகநபரான வெளிநாட்டுப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டுப் பெண் தனது காதலனுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக இவ்வாறு செயற்பட்டுள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்துக் கைது செய்யப்பட்ட வெளிநாட்டுப் பெண் பொத்துவில் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



## இஸ்ரேலிய எதிர்ப்பு சமூக ஊடகப் பதிவுக்காகக் கைதான

# மொஹமட் சுஹைல் 9 மாதங்களின் பின் பிணையில் விடுவிப்பு

சமூக ஊடகப் பதிவில் இஸ்ரேல் எதிர்ப்புப் பதிவொன்றைப் பதிவு செய்தமைக்காக 9 மாதங்களாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த மொஹமட் சுஹைல் என்ற 21 வயது இளைஞரை மவுண்ட்லவேனியா நீதிவான் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்துள்ளது.

இன்றைய நீதிவான் நீதிமன்ற அமர்வின் போது பொலிஸார் மொஹமட் சுஹைலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

இதன்போது இலங்கை பொலிஸ் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவம் செய்து ஆஜராகிய தெகிவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மொஹமட் சுஹைலைப் பிணையில்



விடுதலை செய்யலாம் என்ற சட்டமா அதிபரின் பரிந்துரையை நீதிமன்றத்திடம் கையளித்தார்.

இதனைக் கருத்தில் எடுத்த நீதிவான் மொஹமட் சுஹைலைப் பிணையில் விடுதலை செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இவர் 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இஸ்ரேலியத் தூதரகத்துக்கு அருகில் கைது செய்யப்பட்டார். முதலில் இவரை அடையாள அட்டை வைத்திருக்காததால் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர். இவர் இஸ்ரேல் எதிர்ப்பு ஸ்டிக்கரை ஒட்டினார் எனவும் பொலிஸார் தெரிவித்திருந்தனர். எனினும், நீதிமன்றம் இவரை விடுதலை செய்தது.

அதன் பின்னர் இவர் இன்ஸ்டகிராமில் இஸ்ரேலியக் கொடி காலால் மிதிக்கப்படும் படத்தைப் பதிவிட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

# வைத்தியர் மகேஷியும் பிணையில் விடுவிப்பு

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் மகேஷி விஜேரத்னவை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி இன்று செவ்வாய்க்கிழமை காலை உத்தரவிட்டுள்ளார்.

வைத்தியர் மகேஷி விஜேரத்ன கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வைத்தியர் மகேஷி விஜேரத்னவை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணை மற்றும் 5 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுதலை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.



மருந்துகளை மூன்றாம் தரப்பின் ஊடாக அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் மகேஷி விஜேரத்ன இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த ஜூன் மாதம் 17ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனில் இருந்து விடுமுறைக்கு யாழ். வந்தவர் இளைஞர் ஒருவர் மீது மூர்க்கத்தனமாகத் தாக்குதல்



(எஸ்.நிதர்ஷன்)

ஜேர்மன் நாட்டில் இருந்து விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வந்துள்ள நபர் ஒருவர் 10 பேர் கொண்ட கும்பலுடன் சேர்ந்து இளைஞர் ஒருவரை மூர்க்கத்தனமாகத் தாக்கியதில், தாக்குதலுக்கு இலக்கானவர் படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஈச்சமோட்டை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் ஜேர்மன் நாட்டில் இருந்து விடுமுறையைக் கழிப்பதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ளார். மேற்படி நபர் சகோதரி குடும்பத்தினருடன் முரண்பட்டு, சகோதரியின் கணவருடனும் முரண்பட்டுள்ளார்.

இந்நிலையில், நேற்று திங்கட்கிழமை அவர், தனது சகோதரன் மற்றும் நண்பர்கள் என 10 பேருடன் மது அருந்தியுள்ளார்.

அவ்வேளை, ஏற்கனவே முரண்பட்ட சகோதரியின் கணவரின் நண்பர் அவ்வழியே சென்ற வேளை நிறை போதையில் இருந்த கும்பல் அந்த இளைஞரை வம்புக்கு இழுத்துத் தர்க்கம் புரிந்து, மண்வெட்டிப் பிடி, கூரிய ஆயுதங்களால் மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞரை அயலவர்கள் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தாக்குதலாளிகள் அனைவரும் தலைமறைவாகியுள்ளனர் எனவும், அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், ஜேர்மன் நாட்டில் இருந்து வந்த நபர் மீண்டும் ஜேர்மன் நாட்டுக்குச் செல்லாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்





## வடக்கு மக்கள்...

“எமது பூர்வீக நிலத்தை மீள எம்மிடம் ஒப்படையுங்கள்” என்பதைப் பிரதானமாக வலியுறுத்தும் இந்தப் போராட்டத்தில், “வடக்கில் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களை இலங்கை அரச படைகளிடம் இருந்து விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை வேண்டும்” என்றும் வலியுறுத்தப்பட்டது.

இதன்போது, “மண்ணாசை துறந்த புத்தரின் பிள்ளைகளுக்கு மாற்று இனத்தவரின் மண்ணில் ஏன் ஆசை?, எமது மக்கள் வாழ்வாதாரம் இழந்து வாட அரச படைகள் இலாபம் ஈட்டுவது முறையா?, பூர்வீகக் காணிகளை இழந்த மக்களாக எமது அகதி வாழ்க்கை போதும்” போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தி மக்கள் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்

மன்னார் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், விடுவிக்கப்படாத காணிகளின் உரிமையாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் பலர் பங்கேற்றனர்.

போராட்டம் நடைபெற்ற பகுதியில் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வடக்கில் படையினர் வசமுள்ள காணிகளின் உரிமையாளர்கள், எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நான்கு மாணவர்கள்...

மாணவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் 4 மாணவர்கள் உட்பட ஐவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை இரவு அம்பாறை மாவட்டம், ஒலுவில் பகுதியில் உள்ள தென்கிழக்குப் பல்கலைக்கழத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் மீது இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இதன்போது காயமடைந்த 4 மாணவர்களும், சாரதி ஒருவரும் ஒலுவில் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த மாதமும் முதலாம் ஆண்டு மாணவர்களைப் பகிடிவதை செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் ஒலுவில் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 22 மாணவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று அந்தப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஒலுவில் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கடுமையான பகிடிவதை தொடர்பான காணொளி ஒன்றும் சமூக வலைத்தளங்களில் வெளியாகி இருந்தது. இதில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூன்றாம் ஆண்டில் பயிலும் மாணவர்கள் குழுவொன்று, முதலாம் ஆண்டு மாணவர்களின் அறைகளுக்குள் நுழைந்து முழந்தாளிடச் செய்து கடுமையாகத் துன்புறுத்தி தாக்கும் வகையில் அக்காணொளி அமைந்திருந்தது.

# வீடு உடைத்துத் திருடியவர் 4 ஆண்டுகளின் பின் கைது!



வீடு உடைத்து நகைகள் திருடிய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபர் நான்கு ஆண்டுகளின் பின்னர் யாழ்ப் பாணம் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

2021ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் – சுண்டிக்குழிப் பகுதியில் வீடொன்று உடைக்கப்பட்டு 10 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே ஒருவர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், ஒரு தொகுதி நகைகளும் மீட்கப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் தலைமறைவாகியிருந்த நிலையில், பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த 42 வயதான இந்தச் சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கொழும்பில் இருந்து வந்த போது யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

திருடப்பட்ட நகைகள் சந்தேகநபரிடம் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.



# யாழ். சிறைக் காவலாளியின் வீட்டின் மீது அதிகாலை பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(எஸ்..நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது அடையாளம் தெரியாத நபர்களால் பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் பணியாற்றும் சிறைக் காவலாளியின் வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கான காரணம் தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## எமக்குள்ள அதிகாரங்களைக் கையகப்படுத்தி

# இலக்கை நோக்கி நகர்வதே புத்திசாதுர்யமான செயற்பாடு

## சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு

கடந்த அரசாங்கங்களைப் போலவே தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள விருப்பமற்றவர்களாகவே இருக்கின்றது என்றும், தற்போதைய சூழலில் நாம் எமது நீண்ட போராட்டத்தின் விளைவாக எமக்குக் கிடைத்த மாகாண சபையைக் கையகப்படுத்தி அதன் அதிகாரங்கள் போதாது என்பதைச் சகலருக்கும் தெரிவித்து எமது இலக்கை நோக்கி நகர்வதே புத்திசாதுர்யமான செயற்பாடாகும் என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ். க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதனை வலியுறுத்தும் வகையில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் முழு விவரம் வருமாறு:

“தற்போது ஆட்சியில் இருக்கும் தேசிய மக்கள் சக்தி பல்வேறுபட்ட உறுதிமொழிகளை வழங்கி ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது. அதில் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படும் என்பதும் புதிய அரசியல் சாசனம் ஒன்று உருவாக்கப்படும் என்பதும் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என்பதும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் முக்கியமான உறுதிமொழிகளாக இருந்தன.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ஏறத்தாழ பத்து மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இந்த உறுதிமொழிகள் எதுவும் நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்பகட்ட முயற்சிகளோ நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், நாங்கள் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவோம் என்றும், புதிய யாப்பைக் கொண்டு வருவோம் என்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் என்றும் தொடர்ச்சியாகப் புராணம் போல் ஓதி வருகின்றார்கள்.

தற்போது முதல்முறையாக எல்லை நிர்ணய பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பின்னரே மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியும் என்று மாகாண சபைகள் அமைச்சர் சந்தன அபேரத்தன தெரிவித்திருக்கின்றார்.

ஏற்கனவே அமைக்கப்பட்ட ஆணைக் குழுவினால் எல்லை மீள்நிர்ணயம் செய்தபோதும்கூட அது மலையக தமிழ் மக்களினதும் இஸ்லாமிய மக்களினதும் பிரதிநிதித்துவத்தைக் கணிசமான அளவில் குறைக்கின்றது என்ற அடிப்படையில் எல்லை நிர்ணய சபையால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணய முடிவுகள் கைவிடப்பட்டன.

பழைய விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி மாகாண சபைகளை இயங்க வைத்துக்கொண்டு புதிய தேர்தல் முறைமை, எல்லை மீள்நிர்ணயம் போன்றவற்றைச் சமகாலத்தில் செய்யலாம் எனத் தமிழ் மக்கள் வலியுறுத்தியும்கூட



அதனை மைத்திரி அரசாங்கமோ ரணில் அரசாங்கமோ கண்டுகொள்ளவில்லை.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், நாங்கள் பதவிக்கு வந்தவுடன் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவோம் என்று கூறிய போதிலும், முன்னர் ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் கூறியவற்றையே எவ்வித சொல் வேறுபாடுமின்றி கூறத் தொடங்கிவிட்டது. தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த பலர் இந்த அரசாங்கத்தை நம்பி மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறும் என்றும், புதிய யாப்பு ஒன்று உருவாக்கப்படும் என்றும் கனவுலகில் சஞ்சரிப்பதைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

தற்போது ஆட்சியில் இருப்பவர்களைப் பொறுத்தவரையில் எவ்வித பிரச்சினைகளும் இல்லாமல் அடுத்த நான்கு வருடங்களை எவ்வாறு கொண்டு நடத்துவது என்பதுதான் அவர்களது சிந்தனையே தவிர, பிரச்சினைக்குரிய விடயங்களில் அவர்கள் தலைபோடத் தயாராக இல்லை. இதனை தமிழ் மக்களும் தமிழ்த் தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்த் தரப்புகள் ஒன்றுபட்டு காத்திரமான அழுத்தங்களை அரசாங்கத்துக்குச் செலுத்தாத வரையில், மாகாண சபைத் தேர்தல்கள் என்பது ஒரு கானல் நீராகவே இருக்கும். அடிப்படையில் தற்போதைய ஆட்சியாளர்கள் அதிகாரப் பகிர்வில் விருப்பமற்றவர்களாகவே இருக்கின்றனர். கடந்த காலங்களில் அவர்களது நாடாளுமன்ற உரைகளும், அவர்களது தொடர் நடவடிக்கைகளும் அதிகாரப் பகிர்வுக்கு எதிரானதாகவே இருந்து வந்துள்ளது.

இலங்கை போன்ற நாட்டுக்கு அதிகாரப் பகிர்வு அவசியமற்றது என்றும், அது ஒரு வெள்ளையானைக்குத் தீனி போடுவதைப் போன்று அநாவசிய செலவு என்றும் இவர்கள் பிரச்சாரம் செய்தவர்கள். வடக்கு - கிழக்கு இணைப்பை இல்லாமல் செய்வதற்காக நீதிமன்றம் வரை சென்று அதை நிறைவேற்றியவர்கள். இத்தகையவர்கள் தாமாக முன்வந்து மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துவார்கள் என்று எதிர்பார்ப்பது இலவுகாத்த கிளிக் கதைக்கு ஒப்பானது.

இந்தநிலையில், தமிழ் மக்கள் தங்களுக்கான அதிகாரங்களை எடுத்துக் கொள்ள வேண்டுமாக இருந்தால் மாகாண சபைத் தேர்தலும் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை முழுமையாகவும் சரியாகவும் நிறைவேற்ற வேண்டியதும் அதிமுக்கியமானது.

குறைந்தபட்சம் தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கின்ற அதிகாரங்களைக் கையில் எடுப்பதன் ஊடாகவே வடக்கு - கிழக்கைப் பாதுகாக்க முடியும் என்பதுடன் வடக்கு - கிழக்கில் அரசாங்கம் மேற்கொள்ளும் பல்வேறுபட்ட சட்டவிரோத நடவடிக்கைகளையும் ஓரளவிற்காவது நிறுத்த முடியும்.

அதிகாரங்கள் கையில் இல்லாத காரணத்தினால் அரசாங்கம் தான்தோன்றித்தனமாகத் தான் நினைத்த அனைத்தையும் நிறைவேற்றிக் கொண்டிருப்பதை நாம் வெளிப்படையாகவே பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஆகவே, இவற்றை நாம் ஓரளவிற்கேனும் கட்டுப்படுத்த வேண்டுமாயின் அதற்கான அதிகாரங்கள் என்பது முக்கியமானது.

இப்பொழுது எமது கைவசம் இருப்பது மாகாண சபையும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் மூலம் அதற்கு அளித்திருக்கும் அதிகாரங்கள் மாத்திரமே. எமக்கு ஒரு நிரந்தர தீர்வு கிடைக்கும் வரையில் இருக்கின்ற மாகாண சபை அதிகாரங்களை எடுத்துக்கொண்டு இயன்றவரை தமிழ் மண்ணையும் மக்களையும் காப்பாற்றிக்கொண்டு அடுத்த கட்டம் நோக்கி நகர்வதே புத்திசாலித்தனமானது. இவை பற்றி பேசி ஒரு பொது உடன்பாட்டிற்கு வருவதே இன்றைய காலக்கட்டத்தில் மிகவும் முக்கியமானது என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கருதுகின்றது.

மாகாண சபை அதிகாரங்கள் தொடர்பாகவும் அதில் இருக்கின்ற குறை நிறை தொடர்பாகவும் மக்களுக்கு விழிப்பூட்டும் முகமாக மக்களுடன் கலந்துரையாடுவதற்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளது. அது மாத்திரமல்லாமல், அனைத்து மட்டங்களிலும் இருக்கக் கூடிய தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளில் அக்கறையுள்ள புத்திஜீவிகளுடனும் சமூக செயற்பாட்டாளர்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும் விரும்புகின்றோம்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து பத்துமாதங்கள் கடந்துவிட்ட நிலையில், தாமும் ஏனைய ஆளும் தரப்பினர்களைப் போன்றவர்களே என்ற தமது உண்மை முகத்தைக் காட்டத் தொடங்கிவிட்டனர்.

தமிழ் மக்களாகிய நாம் மேற்படி விடயங்களைப் புரிந்துகொண்டு நமக்கிருக்கும் அதிகாரத்தைக் கையகப்படுத்திக்கொண்டு எமது இலக்கை நோக்கி முன்னோக்கிச் செல்ல முயற்சிக்க வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எதிர்பார்க்கின்றது.” - என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இரும்புக் கரம் கொண்டு அடக்குக!

“மனித நாகரிகத்துக்கே பொருத்தம் இல்லாத - காட்டுமிராண்டித்தனமான - மிக மோசமான - மிகக் கீழ்த்தரமான - ஒரு பண்பியல்பு நம் சமூகத்தில் நிலவுகின்றது என்றால், அதில் முதலாவது, கற்றறிந்தவர்களை நிறைய கொண்டுள்ளவை எனக் கூறப்படும் பல்கலைக்கழகங்களில் நடக்கும் ‘றாகிங்’ சித்திரவதைக் கொடூரம்தான்.” - இவ்வாறு நேற்று ‘மாலை முரசு’ ஆசிரியர் தலையங்கப் பகுதியில் ‘இது தேசியப் பண்பியல்பு’ என்ற தலைப்பில் கருத்து வெளியிட்டிருந்தோம்.

அந்த ஆசிரியர் தலையங்கம் எழுதிய மை காய்வதற்கு முன்னர் ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீட முதலாம் வருட மாணவர்கள் மீது றாகிங் விவகாரத்தை ஒட்டி சிரேஷ்ட மாணவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் நான்கு மாணவர்கள் உட்பட ஐவர் காயமடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற தகவல் வெளியாகி இருக்கின்றது.

“பல்கலைக்கழகங்களில் கல்வி பெரும்பாலும் அரசாங்க உதவித்திட்டமாக வழங்கப்படுகின்றது. மக்களின் வரிப்பணத்தில் இருந்து முன்னெடுக்கப்படும் அந்த வசதி, வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அதையே தங்களுடைய குற்றவியல் செயற்பாட்டுக்கான தளமாகப் பயன்படுத்துவதை நாடு தொடர்ந்தும் சகித்துக் கொண்டிருக்க போகின்றதா?

“தொடர்ந்தும் றாகிங் நீடிக்குமானால், அது இலங்கை சமுதாயத்தின் தேசிய பண்பியல்பாக மாறி விடும் என்பதை பொறுப்புள்ள ஒவ்வொரு பிரஜையும் கவனத்தில் எடுத்து, அதற்கு எதிராகத் தனது பிரதிபலிப்பை காட்டமாக காட்ட முன்வர வேண்டும்.” - இப்படி நேற்று மாலை இதழின் ஆசிரிய தலையங்கத்தில் முத்தாய்ப்பு வைத்திருந்தோம்.

கடந்த மாதமும் முதலாமாண்டு மாணவர்களைப் பகிடிவதைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் ஒலுவில் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 22 மாணவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தனர் என அந்தப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்தகைய நடவடிக்கையின் பின்னரும் நேற்றிரவு இவ்வாறு தாக்குதல் கொடூரம் அரங்கேறி இருக்கின்றது என்றால், இந்த றாகிங அராஜகம் எவ்வளவு தூரம் மோசமாக சமூகத்துக்குள் ஊடுருவி இருக்கின்றது என்பது அதிர்ச்சி தரும் விதத்தில் அம்பலமாகி உள்ளது என்றே கொள்ள வேண்டும்.

இந்த விவகாரத்தை இன்னும் அறியாப் பருவ மாணவர்களின் அசாதாரண விளையாட்டு என்று பார்த்திருக்க முடியாது. மாறாக, இரும்புக் கரம் கொண்டு இந்த கொடூரத்தை அடக்க வேண்டும் என்ற நிலைமையை - எல்லை மீறிய கட்டத்தை - இந்தக் காட்டுமிராண்டித்தனம் எட்டியுள்ளது என்பதுதான் இப்போதுள்ள நிலைமை ஆகும்.

இதேவேளை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதலாமாண்டு மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கடுமையான றாகிங் தொடர்பான காணொளி ஒன்றும் சமூக வலைத்தளங்களில் வெளியாகி இருந்தது எனக் கூறப்படுகின்றது. இதில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூன்றாம் ஆண்டில் பயிலும் மாணவர்கள் குழுவொன்று முதலாமாண்டு மாணவர்களின் அறைகளுக்குள் நுழைந்து அவர்களை முழந்தாளிடச் செய்து, கடுமையாக துன்புறுத்தித் தாக்கும் விடயத்தை அக்காணொளி உள்ளடக்கியிருந்தது எனக் கூறப்படுகின்றது.

பல்கலைக்கழக மாணவர் சமூகத்தின் இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை அடக்க என்ன செய்யப் போகின்றோம்...?

# சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழா நிகழ்வு!

## ஊர்வலம், சிலை திறப்பு, ஆய்வரங்கு, கலையரங்கு நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு

**( வித்தகர் வி.ரி.சகாதேவராஜா)**

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவை யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 19ஆம், 20ஆம் திகதிகளில் கோலாகலமாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தசாசன மற்றும் சமய விவகாரங்களுக்கான அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாண பிரதேச செயலகம், அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம் ஆகியன இணைந்து வரலாற்றில் முதல்முறையாக மாபெரும் துறவற நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவுள்ளன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அனிருத்தனனின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜெகத் விக்ரமரத்ன கலந்து கொள்ளவுள்ளார்.

புத்தசாசன மற்றும் சமய விவரங்களுக்கான அமைச்சர் கலாநிதி ஹினிதும



சுனில் செனவி மற்றும் பிரதி அமைச்சர் ஹமகெதற திசாநாயக்க ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

19ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இருந்து சுவாமிகளின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்வலம் காலை ஒன்பது மணிக்கு இடம் பெறவுள்ளது .

அதனைத் தொடர்ந்து மானிப்பாய் ஆலயடிச் சந்தியில் சுவாமிகளின் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்படவுள்ளது.

அத்துடன் சுவாமிகள் அதிபராக இருந்த மானிப்பாய் இந்து கல்லூரியில் ஆரம்ப நிகழ்வுகள் அன்று காலையில் நடைபெறவுள்ளன.

19 ஆம் திகதி மாலை 4 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்காதேவி மணி மண்டபத்தில் இசை அரங்கு இடம் பெறவுள்ளது.

மறுநாள் 20 ஆம் திகதி காலையில் ஆய்வரங்கும் மாலையில் கலையரங்கும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

19 மற்றும் 20 ஆகிய இரு தினங்களிலும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் ஓவியக் கண்காட்சி நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதின கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதேவேளை, அங்கு இரு தினங்களிலும் இந்து சமய கலாச்சார திணைக்களத்தின் புத்தக விற்பனையும் இடம் பெறவுள்ளது.

# சர்வதேச இளைஞர் தின விழிப்புணர்வு!





**(மட்டு. துஷாரா, அபு அலா)**

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழிற்பயிற்சி நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு இன்று (15) மட்டக்களப்பு தனியார் பஸ்தரிப்பு நிலையத்தின் முன்பாக இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்புத் தொழிற் பயிற்சி நிறுவனத்தின் முகாமையாளர் நடராசா சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வின்போது தொழிசார் முயற்சியை ஊக்குவிக்கும் தூண்டுப் பிரசுரங்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன. அதேவேளை அது தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டது.

குறிப்பாக, உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கான தொழிற் கல்வியை வெளிநாட்டு வேலை வாய்ப்பு தொழிற்பயிற்சி நிறுவனம் வழங்கி வருவதுடன், அதன் மூலமாக அவர்களுக்கான தொழிலை உருவாக்கி கொடுப்பதே எங்களது நோக்கமென்று மட்டக்களப்பு மாவட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழிற்பயிற்சி நிறுவனத்தின் முகாமையாளர் நடராசா சுதர்சன் இதன்போது தெரிவித்தார்.

ஒரு வருடகாலப் பகுதிக்குள் 50 - 75 ஆயிரம் இளஞர், யுவதிகளுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதே நோக்காக உள்ளது என்றும் அதன் மூலமாக எமது நாட்டின் பொருளாதாரத்தை மேன்படுத்த முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

GSM
குணம்ஸ்
சூப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# எந்தவித அபிவிருத்தியும் இன்றி உள்ளது வரணிப் பொதுச் சந்தை!

## புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை





**(த.சுபேசன்)**

கொடிகாமம் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்டு நீண்ட காலமாக எந்தவிதமான புனரமைப்பும் இன்றிக் காணப்படும் வரணிப் பொதுச் சந்தையைப் புனரமைத்து மீளக் கட்டியெழுப்புமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வரணிப் பிரதேச மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

வரணி ஏழு கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பரந்துபட்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது. கிட்டத்தட்ட பத்தாயிரம் மக்கள் இங்கு வசித்து வருகின்றனர். இங்கு மத்திய கல்லூரி உட்பட பாடசாலைகள், பிரதேச வைத்தியசாலை, பொதுச் சந்தை, தபால் நிலையம் ஆகியன காணப்படுகின்ற போதிலும் இவை அனைத்துமே பல தேவைப்பாடுகள் மற்றும் குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றன.

குறிப்பாகச் சாவகச்சேரிப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட வரணிப் பொதுச் சந்தை பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றது.

போதிய இடவசதி காணப்படுகின்ற போதிலும் பாழடைந்த பழைய கட்டடம், சுற்றுவேலி இன்மை, மீன் சந்தைக் கட்டடம் வியாபாரிகளுக்கு ஏற்ற விதத்தில் இல்லாமை, மரக்கறிகளைப் பாதுகாப்பதற்கான வசதி இல்லாமை, இறைச்சிக் கடை உள்ள போதிலும் அது இயங்காமை உள்ளிட்ட பாரிய குறைபாடுகள் காணப்படுகின்றன.

இவ்வாறு குறைபாடுகளுடன் சந்தை காணப்படுவதால் வியாபாரிகளும் அதேநேரம் நுகர்வோரும் மிகக் குறைந்த அளவிலேயே சந்தையை நாடுகின்றனர். நண்பகல் 12மணியுடன் சந்தை வளாகம் வெறிச்சோடி விடுகின்றது.

இதனால் 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கொடிகாமம் சந்தை மற்றும் வேறு உள்ளூர் தனியார் வர்த்தக நிலையங்களைப் பொது மக்கள் நாடுகின்றனர்.

கடந்த காலங்களில் சாவகச்சேரிப் பிரதேசசபை வரணிச் சந்தையை அபிவிருத்தி செய்ய முயற்சி எடுக்கவில்லை. தற்போது புதிய சபை அமைக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த ஒருவர் வரணி முதலாம் வட்டார உறுப்பினராக தெரிவாகியுள்ளார். அவர் சபை ஊடாகவும், அதேநேரம் வேறு வழிகளிலும் சந்தையை அபிவிருத்தி செய்வதாக உறுதியளித்துள்ளார்.

வரணிப் பொதுச் சந்தையை புனரமைத்து பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தும் பட்சத்தில் பிரதேசசபை வருமானத்தை ஈட்ட முடிவதுடன் கிராம மக்கள் மற்றும் வியாபாரிகளும் பயனடைய முடியும்.

சந்தையானது கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் சிறப்பான அமைவிடத்தில் அமைந்துள்ளது. பிரதேச சபைக்கு அதனை உரிய விதத்தில் கையாண்டு வருமானம் ஈட்டவும் அதேநேரம் மக்களுக்கு சேவையை வழங்கவும் முடியும் என்று சுட்டிக்காட்டினர்.

# சாவகச்சேரி நகர சபை எல்லையில் உரிமை பெறாத நிலையங்கள் மூடல்!

## இன்றைய கூட்டத்தில் தீர்மானம்

சாவகச்சேரி நகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கும் வியாபார, தொழில், வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் சபையில் பதிவு செய்து அதற்குரிய கட்டணத்தை செலுத்தி உரிமம் பெற்றிருக்க வேண்டும். தவறின் வியாபார, தொழில், வர்த்தக நிலையங்களை மூடப்பட வேண்டிய நிலைமை ஏற்படும்

இவ்வாறு இன்று (15) நடைபெற்ற சாவகச்சேரி நகரசபை அமர்வில் முடிவு செய்யப்பட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொதுச் சந்தைக்கு வெளியே உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

சந்தைக்கு வெளியே நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபாரம் செய்ய விரும்புவோர் நகரசபை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு அதற்கு உரிய கட்டணத்தைச் செலுத்தி வியாபாரம் செய்யலாம்.

தென் பகுதியில் இருந்துவரும் நடைபாதை வியாபாரிகள் வீதியோரங்களில் விற்பனைப் பொருள்களைப் பரப்பி வியாபாரம் செய்வதால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்க சபை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாத இடங்களில் வியாபாரம் மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை, சந்தை உட்புறத்தில் சந்தைக் கட்டடம் தவிர்ந்த ஏனைய இடங்களில் நடைபாதை வியாபாரம் செய்வதும் தடை செய்யவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# உள்ளூராட்சி சபைகளிலுள்ள உறுப்பினர்கள் அரச இயந்திரத்தை அதிகாரம் செய்யக்கூடாது

## சாவகச்சேரி நகர சபையின் தவிசாளர் ஸ்ரீபிரகாஸ் தெரிவிப்பு



உள்ளூராட்சி அமைப்புகள் அரசு இயந்திர நிர்வாகக் கட்டமைப்புக்கு உட்பட்டது. உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். இவர்கள் மக்களுக்குச் சேவையாற்றும் பணிகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர அரச இயந்திரத்தை அதிகாரம் செய்ய முயலக் கூடாது.

இவ்வாறு இன்று (15) சாவகச்சேரி நகர சபையின் இரண்டாவது அமர்வு நடைபெற்ற போது தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்டு மக்களுக்குத் தேவையான சேவைகளை நாம் மேற்கொள்ள அரச இயந்திரத்துடன் இணைந்து செயற்படுவோம் என்ற நோக்குடன் பணியாற்ற வேண்டும்.

சபைகளில் அமர்வுகளில் எடுக்கப்படும் ஒவ்வொரு தீர்மானமும் மக்களுக்கு பயன்தரக் கூடியதாக இருக்க வேண்டும் .

அரச உத்தியோகத்தர்களுக்கு நாம் எடுக்கும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆலோசனைகள், வேண்டுகோள்கள், அறிவுறுத்தல்கள் வழங்க உறுப்பினர்களுக்கு உரிமை உள்ளது. ஆனால் அதனை தவறாக புரிந்து அதிகாரம் செய்யக்கூடாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.





# கல்லுண்டாயில் நிலவும் பிரச்சினைகளை ஆராய்ந்தார் சுகாதாரத் தலைவர் சாருபன்!

## எதிர்கால செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடல்

யாழ். மாநகர சபையின் சுகாதாரக் குழுத் தலைவர் சி. சாருபன், சுகாதாரக் குழு உறுப்பினர்கள் மற்றும் பிரதி மேயர் இம்மானுவல் தயாளன் ஆகியோருடன் கல்லுண்டாய்க்கு விஜயம் செய்து அங்கு நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்துள்ளதுடன் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளார்.

சுகாதார குழுத் தலைவராக தெரிவு செய்யப்பட்டு சிலமணி நேரத்தில் அதன் தலைவர், குழுவினருடன் இந்தக் களத் தரிசிப்பில் ஈடுபட்டுள்ளார்.

காக்கதீவு மற்றும் கல்லுண்டாய் பகுதிகளில் தேங்கியுள்ள திண்மக் கழிவுகள், இதனால் அந்தப் பகுதிகளில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகள், இவற்றை தரம் பிரித்து அகற்றுவதில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் போன்ற விடங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த விடயத்தை எதிர்காலத்தில் எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.







# கோயிற்குடியிருப்பு சந்தனமுதலிச்சிபுலம் முருகமூர்த்தி கோவில் கொடியேற்றம்

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சந்தனமுதலிச்சிபுலம் முருகமூர்த்தி கோவில் வருடாந்த பெருந் திருவிழா வின் கொடியேற்றத்துடன் திருவிழா இன்று (15) ஆரம்பமாகியது.

பத்து தினங்கள் நடைபெறும் பெருந் திருவிழாவின் தேர்த்திருவிழா ஜூலை 23ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா மறுநாள் 24 ஆம் திகதி ஆடி அமா வாசை தினத்தன்றும் நடைபெறும்.











# திகாமடுல்ல மீடியா போர மாதாந்தக் கூட்டம்





**(பாலமுனை)**

திகாமடுல்ல மீடியா போரத்தின் மாதாந்த கூட்டம் அமைப்பின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எப் றிபாஸ் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (13) ஒலுவில் ஹோட்டலில் நடைபெற்றது.

அமைப்பின் எதிர்கால திட்டங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டது.

புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற்றது. செயலாளராக ஏ. ஜே.எம். ஹனீபா, பொருளாளராக ஐ.எல்.எம். தாஹீர், பிரதித் தலைவராக ஜெஸ்மி எம். மூஸா, உப தலைவராக எம்.எப். தாஜ்ஹான், உப செயலாளராக ஏ.எல்.எம். றனீஸ், பத்திரிகை ஆசிரியராக ஏ.எஸ். சபானா உட்பட பதினொரு பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

# பிரான்ஸ் நகரின் தேசிய தினம் லாச்சப்பலில் கொண்டாட்டம்!



பிராஸின் தலைநகர் பாரிஸ் 10ஆம் வட்டாரத்தில் தமிழர் வர்த்தக மையத்தில் “குட்டி யாழ்ப்பாணம்” என அழைக்கப்படு லாச்சப்பலில் நேற்று (14) பிரான்ஸ் தமிழ் வர்த்தகர்கள் சங்கத்–தால் தேசிய தேசிய தினம் கேக் வெட்டிக் கொண்டப்பட்டது.

இந்த நிகழ்வில் பாரிஸ் 10 ஆம் வட்டார நகர சபைத் துணை முதல்வர் ரபேல் போனியர், பாரிஸ் மாவட்ட சபை உறுப்பினர் திருமதி. பிலோமீன் ஜூலியட் ஆகியொர் கலந்து கொண்டனர்.

ஈழத் தமிழர்களுக்கு அடைக்கலம் தந்து ஆதரித்து ஈழத் தமிழர்களின் இரண்டாம் தாய்நாடக உள்ள பிரான்ஸ் நாட்டின் தேசிய தினத்தை பிரான்ஸ் தமிழ் வர்த்தகர்கள் சங்கம் நன்றியோ கொண்டாடியது.

# மாற்றுத் திறனாளிகளிடையே சங்கீதப் போட்டிக்கு ஏற்பாடு!

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் மாற்றுத் திறனாளிகளுக்கிடையிலான சங்கீதப் போட்டிகளை மாகாண மட்டத்தில் நடத்தவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

11 வயது தொடக்கம் 35 வயது வரையான மாற்றுத் திறனாளிகள் போட்டிகளில் பங்குபற்ற முடியும்.

பாட்டு மற்றும் வாத்திய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கனிஷ்ட , சிரேஷ்ட , திறந்த மற்றும் விசேட போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தத்தமது பிரதேச செயலக கலாசார அலகில் உரிய விண்ணப்பப் படிவத்தையும் அறிவுறுத்தல்களையும் பெற்று கொள்ளுமாறும் அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.







# நிபா வைரஸால் தொற்றால் கேரளாவில் 2 பேர் உயிரிழப்பு

## தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்

நிபா வைரஸ் பாதிப்பால் கேரளாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2 ஆக உயர்ந்துள்ளது. இதையடுத்து கேரள மாநிலத்தில் நிபா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளை அந்த மாநில அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

கேரள மாநிலத்தில் ஆண்டு தோறும் கோழிக்கோடு, பாலக்காடு, மலப்புரம் உள்ளிட்ட இடங்களில் தொடர்ச்சியாக நிபா வைரஸ் பாதிப்பு இருந்து வருகிறது.

இந்நிலையில் பாலக்காடு மாவட்டம் மன்னார்காடு அருகே குமரமபுத்தூர் பகுதியை சேர்ந்த 57 வயது நபர் ஒருவர் கடந்த சில நாள்களாக தீவிர காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார். இதற்காக அப்பகுதியில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். ஆனால் அவருக்கு காய்ச்சல் குணமாகவில்லை.

இதையடுத்து அவர், மலப்புரம் மாவட்டம் பெரிந்தல்மன்னா அருகே உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. அந்த மருத்துவமனையில் அவரது உடல்நிலை மிகவும் மோசமானதையொட்டி மஞ்சேரியில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அவர் மாற்றப்பட்டார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் மாலை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். இதையடுத்து அவரது உடல் திரவ மாதிரிகளை சேகரித்து பரிசோதித்ததில் அவர் நிபா வைரஸ் பாதித்து இறந்தது தெரியவந்தது. இதனால் கேரளாவில் நிபா வைரஸ் பாதித்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆக உயர்ந்துள்ளது. சில நாள்களுக்கு முன்பு நிபா வைரஸால் பாதிக்கப்பட்ட மலப்புரத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மஞ்சேரி அரசு மருத்துவமனையிலிருந்து இறந்தவரின் உடல் திரவ மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மகாராஷ்டிர மாநிலம் புனேவில் உள்ள வைராலஜி ஆய்வகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இத்த கவலை கேரள மாநில சுகாதாரத் துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் உறுதி செய்துள்ளார். இதையடுத்து மாநில சுகாதாரத்துறை நிபா பரவல் தடுப்பு நடவடிக்கைகளை மலப்புரம், பாலக்காடு, பெரிந்தல்மன்னா, கோழிக்கோடு பகுதிகளில் தீவிரப்படுத்தியுள்ளது.

அதன்படி முதற்கட்டமாக மாவட்ட சுகாதாரத்துறையால் நிபா வைரஸ் பாதித்து இறந்த நபரின் வீட்டை சுற்றி 3 கிலோமீற்றர் சுற்றளவு தூரம் உள்ள பகுதிகள் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதனால் இங்குள்ள பகுதிக்குள் வெளியில் இருந்து நபர்கள் வரவும், இங்குள்ள மக்கள் வெளியே செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த டலத்தில் இருப்பவர்கள் முகக்கவசம், சமூக இடைவெளியை கடைப்பிடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

நிபா வைரஸால் பாதித்து இறந்த 2 ஆவது நபருடன் மொத்தம் 46 பேர் தொடர்பில் இருந்தனர். இதையடுத்து இறந்த நபருடன் தொடர்பில் இருந்த நபர்களின் பட்டியல் சேகரிக்கப்பட்டு வருகிறது.

இதனிடையே நிபா வைரஸ் அறிகுறிகளுடன் பெரிந்தல்மன்னாவில் உள்ள தனியார் மருத்துவமனையில் நேற்று ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.







# அகமதாபாத் விமான விபத்து தொடர்பில் ஏர் இந்தியா தலைமை அதிகாரி விளக்கம்

ஏர் இந்தியா விமான விபத்து தொடர்பாக முதற்கட்ட அறிக்கை தொடர்பில் ஏர் இந்தியாவின் தலைமை நிர்வாக அதிகாரி விளக்கமளித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஜூன் 12 ஆம் திகதி, குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருந்து லண்டன் நோக்கி புறப்பட்ட ஏர் இந்தியா விமானம், புறப்பட்ட சில நிமிடங்களில் மருத்துவக் கல்லூரி விடுதியின் கட்டடத்தில் விழுந்து விபத்தை சந்தித்தது.

இதில், விமான ஊழியர்கள் உட்பட 242 பேர் பயணித்ததில் பயணி ஒருவர் மட்டும் உயிர் பிழைக்க 241 பேர் உயிரிழந்தனர்.

இந்த விமான விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வந்த நிலையில் விமானத்தின் கறுப்பு பெட்டியில் இருந்த தரவுகள், விமானிகள் இடையே நடைபெற்ற உரையாடல் பதிவுகள் உள்ளிட்டவை ஆய்வு செய்யப்பட்டன.

இதனடிப்படையில், கடந்த ஜூலை 12 ஆம் திகதி முதல்கட்ட அறிக்கையை விமான விபத்து புலனாய்வு அமைப்பு வெளியிட்டது.

இதில், விபத்திற்கு விமானிகள் தான் காரணம் என்பது போல் அறிக்கை உள்ளதாக தெரிவித்து இந்திய விமானிகள் சங்கம் இந்த அறிக்கைக்கு கண்டனம் தெரிவித்தது.

இதைத்தொடர்ந்து, ஏர் இந்தியா நிறுவன தலைமை செயல் அதிகாரி கேம்பல் வில்சன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“விமான விபத்து தொடர்பான முதற்கட்ட அறிக்கையில் விமான இயந்திரங்களில் அல்லது பராமரிப்பில் எந்த பிரச்சினைகளும் இல்லை.

அனைத்து கட்டாய பராமரிப்புப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது அத்தோடு, எரிபொருளின் தரத்திலும் எந்தப் பிரச்சினையும் இல்லை.

விமானிகள் தங்கள் கட்டாய முன்-பயண மூச்சுப் பரிசோதனையில் தேர்ச்சி பெற்றனர் அத்தோடு அவர்களின் மருத்துவ நிலையிலும் எந்த பிரச்சினை இல்லை.

ஏர் இந்தியாவின் அனைத்து விமானங்களும் சோதனை செய்யப்பட்டதில், அவை அனைத்தும் சேவைக்குத் தகுதியானவை எனக் கண்டறியப்பட்டது.

முதற்கட்ட அறிக்கையில், விபத்துக்கான எந்த காரணமும் அடையாளம் காணப்படவில்லை எந்த பரிந்துரைகளும் இல்லை.

விசாரணை இன்னும் முடிவடையாததால், அனைவரும் எந்தவித முன்கூட்டியே முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

முழுமையான மற்றும் விரிவான விசாரணையை நடத்துவதற்குத் தேவையான அனைத்தையும் விசாரணை அதிகாரிகள் பெற்றிருப்பதை உறுதிசெய்ய நாங்கள் தொடர்ந்து அவர்களுடன் ஒத்துழைப்போம்” என தெரிவித்துள்ளார்.

# ‘இந்திய சினிமாவின் ரோல் மொடல்’: சரோஜா தேவிக்கு மோடி புகழஞ்சலி





பழம்பெரும் நடிகை சரோஜா தேவியின் மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது எக்ஸ் தளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில்,

“பிரபல திரைப்பட ஆளுமை சரோஜா தேவியின் மறைவு வருத்தமளிக்கிறது.

இந்திய சினிமா மற்றும் கலாச்சாரத்தின் ரோல் மொடலாக சரோஜா தேவி நினைவுகூரப்படுவார். அவரது பன்முக செயல்திறன்கள் பல தலைமுறைகளுக்கு அழியாத அடையாளங்களை விட்டுச்சென்றுள்ளன. பல்வேறு மொழிகளில், பல்வேறு பொருண்மைகளை உள்ளடக்கிய அவரது பணிகள் பன்முக திறமையை எடுத்துக்காட்டுவதாக உள்ளன. அவரது குடும்பத்தினருக்கும், ரசிகர்களுக்கும் எனது இரங்கல்கள்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# பூமிக்கு புறப்பட்டார் இந்திய வீரர் ஷூபன்ஷு சுக்லா: இன்று பிற்பகல் பசிபிக் கடலில் விண்கலம் இறங்கும்



சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருந்து ஆய்வு செய்த இந்திய வீரர் ஷூபன்ஷு சுக்லா நேற்று விண்கலத்தில் பூமிக்கு புறப்பட்டார். அவரது விண்கலம் இன்று பிற்பகல் அமெரிக்காவின் கலிபோர்னியா பசிபிக் கடலில் இறங்குகிறது.

அமெரிக்காவின் அக்ஸியம் ஸ்பேஸ், நாசா, இஸ்ரோ, ஐரோப்பிய விண்வெளி முகமை ஆகியவை இணைந்து கடந்த 25 ஆம் திகதி சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு பால்கன் ரொக்கெட் மூலம் டிராகன் விண்கலத்தை அனுப்பின. இந்த விண்கலத்தில் இந்திய வீரர் ஷூபன்ஷு சுக்லா, அமெரிக்காவின் பெக்கி விட்சன், போலந்தின் ஸ்லாவோகி உஸ்னான்ஸ்கி, ஹங்கேரியின் திபோர் கபு ஆகியோர் 28 மணி நேரம் பயணம் செய்து கடந்த 26 ஆம் திகதி சர்வதேச விண்வெளி நிலையத்தை சென்றடைந்தனர்.

கடந்த 28 ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடியுடன் சுக்லா உரையாடினார். கடந்த 3, 4, 8 ஆகிய திகதிகளில் திருவனந்தபுரம், பெங்களூர், லக்னோவை சேர்ந்த 500 மாணவ,மாணவிகளுடன் அவர் கலந்துரையாடினார். கடந்த 6 ஆம் திகதி இஸ்ரோ விஞ்ஞானிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஷூபன்ஷு சுக்லா 17 நாள்கள் தங்கியிருந்தார். அப்போது அவர் சுமார் 60 வகையான ஆய்வுகளை செய்தார். குறிப்பாக நெல், காராமணி, எள், கத்தரி, தக்காளி உள்ளிட்ட 6 வகைகளை சேர்ந்த 4,000 விதைகளை சுக்லா விண்வெளிக்கு எடுத்துச் சென்றார். அந்த விதைகளை அவர் விண்வெளியில் சிறப்பு பெட்டிகளில் வைத்து முளைக்கச் செய்தார். இந்த ஆராய்ச்சியில் இஸ்ரோ, கேரள வேளாண் பல்கலைக்கழகம், ஐரோப்பிய விண்வெளி முகமை ஆகியவையும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

பாசி பன்றிக்குட்டி என்ற நுண்ணுயிரியை ஷூபன்ஷு சுக்லா விண்வெளிக்கு எடுத்துச் சென்றார். இதை வெறும் கண்ணால் பார்க்க முடியாது. நுண்நோக்கி உதவியுடன் மட்டுமே பார்க்க முடியும். இந்த நுண் உயிரி விண்வெளியில் எவ்வாறு வளர்கிறது என்பது குறித்தும் சுக்லா ஆய்வு செய்தார்.

நீல பச்சை பாசி வகையை சேர்ந்த இரு பாசிகளை அவர் விண்வெளிக்கு எடுத்துச் சென்றார். இந்த பாசி வகைகள் எவ்வாறு வளர்கின்றன என்பது குறித்து அவர் ஆய்வு நடத்தினார். மைக்ரோஅல்கா என்ற பாசி வகையையும் சுக்லா விண்வெளிக்கு எடுத்துச் சென்றார். இதன் வளர்ச்சி குறித்தும் அவர் செய்தார். இந்த வகை பாசி மூலம் உணவு, எரிபொருள், ஒக்ஸிஜனை உற்பத்தி செய்ய முடியும். இது எதிர்கால விண்வெளி பயணத்துக்கு பயனுள்ளதாக இருக்கும்.

இவை உட்பட ஒட்டுமொத்தமாக 60 வகையான ஆராய்ச்சிகளை ஷூபன்ஷு சுக்லா விண்வெளியில் மேற்கொண்டார். விதைகள், பாசிகள் உள்ளிட்ட அனைத்தையும் அவர் பூமிக்கு கொண்டு வருகிறார்.

ஷூபன்ஷு சுக்லா உட்பட 4 விண்வெளி வீரர்களும் நேற்று மாலை 4.35 மணிக்கு சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து டிராகன் விண்கலத்தில் பூமிக்கு புறப்பட்டனர். சுமார் 23 மணி நேர பயணத்துக்குப் பிறகு டிராகன் விண்கலம் பூமியை வந்தடையும்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் பசிபிக் கடலில் இன்று மாலை விண்கலம் இறங்குகிறது. டிராகன் விண்கலத்தின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் மற்றும் நாசாவின் மீட்புக் குழு, 4 விண்வெளி வீரர்களையும் விண்கலத்தில் இருந்து பத்திரமாக மீட்க தயார் நிலையில் உள்ளனர்.

# ரஷ்யாவுக்கு எதிராக 100 வீத இரண்டாம் நிலை வரிகள்

## டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பு

ரஷ்யாவுக்கு எதிராக 100 வீத இரண்டாம் நிலை வரிகள் விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அச்சுறுத்தியுள்ளார்.

50 நாள்களுக்குள் உக்ரைன் - ரஷ்யா இடையே அமைதி ஒப்பந்தம் எட்டப்படா விட்டால் இந்த வரிகள் நடைமுறைப்படுத்தப்படும் என ட்ரம்ப் எச்சரித்துள்ளார்,



வெள்ளை மாளிகையில் நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ரூட்டுடனான சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரிகள், ரஷ்ய எண்ணெய், இயற்கை எரிவளி, யுரேனியம் உள்ளிட்ட பொருள்களை வாங்கும் நாடுகளுக்கு எதிராக விதிக்கப்படும்.

இதனால் அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்ய முடியாது என்று டிரம்ப் கூறினார்.

இந்தியா, சீனா மற்றும் துருக்கி போன்ற நாடுகள் இதனால் பாதிக்கப் படலாம்.

உக்ரைனில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெறும் போரை முடிவுக்கு கொண்டுவர ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆர்வம் காட்டவில்லை என என குற்றம் சாட்டியுள்ளார்.

இதனால், அமெரிக்கா உக்ரைனுக்கு பேட்ரியாட் வான் பாதுகாப்பு அமைப்புகளை அனுப்பும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா இந்த அமைப்புகளை நேட்டோவிற்கு அனுப்பும் என்றும், பின்னர் அவற்றை உக்ரைனுக்கு வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புடின் மீது கடும் அதிருப்தியில் உள்ள அமெரிக்க ஜனாதிபதி ரஷ்ய படைகளை எதிர்த்து போராட உதவும் வகையில் உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்க உள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு
செவ்வாய்க்கிழமை | 15/07/2025

## படகு விபத்தில் இளைஞர் பலி!

ஒன்டாரியோ மாகாணத்தின் அடிங்டன் ஹைலேண்ட்ஸ் பகுதியில் உள்ள வெஸ்லெம் கூன் ஏரியில் நிகழ்ந்த படகு விபத்தில் 22 வயதான இளைஞர் உயிரிழந்துள்ளார். C02





# சீரற்ற காலநிலையால் மொண்ட்ரியல் பாதிப்பு

**மொண்ட்ரியல் மற்றும் அதனை சூற்றியுள்ள பகுதிகளில் ஞாயிறு பிற்பகலில் ஏற்பட்ட கடுமையான இடியுடன் கூடிய புயலால் நூற்றுக்கணக்கான வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.**

**கனடாவின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை மாலை 3 மணிக்கு முன்னதாகவே தெற்கு கியூபெக் பகுதிக்கான கடுமையான இடியுடன் கூடிய மழை எச்சரிக்கையை வெளியிட்டது.**


மாலை 4 மணி வரை, மொண்ட்ரியல் முழுவதும் மிகுந்த மழை மற்றும் பலத்த காற்று வீசியது. இதில், Hydro-Quebec நிறுவனத்தின் தகவலின்படி, ஒரு கட்டத்தில் சுமார் 1 லட்சம் வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

மாலை 5 மணியளவில், பாதிக்கப்பட்ட எண்ணிக்கை சுமார் 40,000 வீடுகளுக்கு குறைந்தது. பெரும்பாலான மின்துண்டிப்புகள் லாரன்டியன்ஸ், லனாடியர் , மற்றும் மொன்டெரெஜி பகுதிகளில் பதிவாகியுள்ளன.

மழை காரணமாக மண்ட்ரியலின் பல பகுதிகளில் சாலைகள் மற்றும் தரைக்கடைகள் வெள்ளத்தில் மூழ்கின. மொண்ட்ரியல்-ட்ரூடோ விமான நிலையத்தில் பல விமானங்கள் தாமதமடைந்துள்ளன.

குறைந்தபட்சம் 10 விமானங்கள் பிற விமான நிலையங்களுக்கு வழி மாற்றப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பயணிகள் விமான நிலையத்திற்கு வருவதற்கு முன் தங்கள் விமான நிலையை சரிபார்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.





# வடக்கு ஆளுநருடன் கனடா தூதுவர் சந்திப்பு

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் மற்றும் இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ் இடையிலான முக்கிய சந்திப்பு நேற்று திங்கள் கிழமை காலை யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இலங்கையில் தனது பணிக்காலம் அடுத்த மாதத்தில் முடிவடையவுள்ளதாகத் தூதுவர் ஆளுநரிடம் இதன்போது தெரிவித்தார். இதுவரை வழங்கிய ஒத்துழைப்புக்கும், கனேடிய அரசாங்கத்தின் உதவிகளுக்கும் ஆளுநர் நன்றியை தெரிவித்தார்.

அவ்வேளை, வடக்கு மாகாணத்தில் காணி தொடர்பான பிரச்சினைகள், குறிப்பாக வன்னி பிராந்தியத்தில் நிலவும் நிலைமைகள் 03

# இரத யாத்திரை மீது முட்டை வீசி தாக்குதல்

கனடாவில் இந்தியர்கள் நடத்திய ரத யாத்திரையின் போது, இனந்தெரியாதவர்கள் முட்டைகளை வீசி தாக்குதல் நடத்திய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டொரோன்டோ நகரில் இந்தியர்களின் ரத யாத்திரை நிகழ்ச்சி நடைபெற்றது. பக்தி பாடல்களை பாடியபடியும், கடவுளின் பெயரைச் சொல்லி கோஷமிட்டபடி இந்தியர்கள் ஊர்வலமாக சென்று கொண்டிருந்தனர். அப்போது, அவர்கள் மீது சிலர் முட்டைகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இது தொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களில் வெளியாகியது. அந்த காணொலியில் வீதியின் ஓரத்தில் இருந்த கட்டடங்களில் இருந்து முட்டைகளை, யாத்திரை





சென்ற இந்தியர்கள் மீது வீசுவது தெரிய வந்தது. இது இனவெறி தாக்குதல் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

ஊர்வலத்தில் பங்கேற்றவர்கள் கூறும்போது,

“முட்டைகளை வீசி தாக்குதல் நடத்தும் போது அதிர்ந்து போய் விட்டோம். எங்களின் ரத யாத்திரையை நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த செயலை செய்தனர். ஆனால், அவர்களின் எண்ணம் தோல்வியடைந்து விட்டது. வெறுப்பு ஒருபோதும் வெல்ல முடியாது,” என்றனர்.





# குப்பை கொட்டுகின்ற காணொலியால் சர்ச்சை

கனடாவில் ஒரு தம்பதியர் குப்பை கொட்டும் காணொலி ஒன்று வைரலானதைத் தொடர்ந்து, அவர்கள் மீது இனரீதியில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன.

கனடாவில், சாலையோரமாக ஓரிடத்தில் தங்கள் காரை நிறுத்திய தம்பதி, தங்கள் கைகளிலிருந்த பைகளிலிருந்து எதையோ எடுத்து வீசுவதைக் காட்டும் ஒரு காணொலி வெளியாகியுள்ளது.

இந்த காணொலி சமூக ஊடகமான எக்ஸில் வெளியாகி வைரலாகியுள்ளது. அதைத் தொடர்ந்து, அந்த தம்பதியர் இந்தியர்கள் என்றும், அவர்கள் குப்பை கொட்டுவதாகவும் கூறி அவர்களை விமர்சித்துவருகிறார்கள் பலர்.

அவர்கள் இந்தியாவை கெடுத்து விட்டார்கள். அவர்களை கனடாவையும் கெடுக்க விடக்கூடாது என்கிறார் ஒருவர். இவர்களால் எல்லா புலம்பெயர் ந்தோருக்கும் கெட்ட பெயர் என்கிறார் மற்றொருவர்.

ஒருவேளை அவர்கள் ஏதாவது பறவைகள் அல்லது விலங்குகளுக்கு உணவளிக்கிறார்களோ என்றும் ஒருவர் சந்தேகம் எழுப்பியுள்ளார்.

இப்படியே இனரீதியான விமர்சனங்கள்வரை முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், ஒருவர், அவர்கள் கவரிலிருந்து எதையோ எடுத்து போட்டுவிட்டு, கவரை தங்கள் கைகளிலேயே வைத்துக்கொள்கிறார்கள்.

ஆகவே, அவர்கள் விலங்குகளுக்கு உணவளிப்பது போல தோன்றுகிறது. தயவு செய்து பொதுவாக யாரையும் குற்றப்படுத்தி பேசவேண்டாம், அவர்கள் கனடாவின் பொருளாதாரத்துக்கு எவ்வளவு பங்களிப்பைச் செய்கிறார்கள் என்பதையும் மறக்க வேண்டாம் என்கிறார்.

## படகு...

( C01 தொடர்ச்சி)

இதனையடுத்து, கடல் மற்றும் நீர் நிலைகளில் நடைபெறும் பல்வேறு விபத்துகள் குறித்து மாகாண பொலிஸார், பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சனிக்கிழமை காலை 7:45 மணியளவில், பென்க்ரா:.ப்டிலிருந்து கிழக்காக 40 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வெஸ்லெம்கூன் ஏரியில் ஒருவர் நீரில் விழுந்துள்ளதாக ஒன்டாரியோ மாகாண பொலிஸாருக்கு அழைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அழைப்பின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட அதிகாரிகள் பல்வேறு வழிகளில் மீட்புப் பணிகளை மேற்கொண்டிருந்தனர். சனிக்கிழமை இரவு 8 மணியளவில், டொரொன்டோவைச் சேர்ந்த 22 வயது டைய இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் 21 வயதான படகோட்டி ஒருவரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மது அருந்தி அசமந்தப் போக்கில் படகை செலுத்தியதாக குறித்த இளைஞர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நீரில் பயணிக்கும் போதும், நீர் நிலைகளுக்குச் செல்லும் போதும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை, இந்த வார இறுதியில் மாகாணம் முழுவதும் நடந்த நீர்நிலைகள்சார்ந்த அதிக எண்ணிக்கையிலான விபத்துகளுக்குப் பின்னர் வழங்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# கனடா-அமெரிக்க எல்லை அருகே குடியேறிகளின் வாகனம் விபத்து

கனடா-அமெரிக்க எல்லை அருகே ஆவணமில்லா குடியேறிகள் பயணம் செய்த வாகனமொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த வாகன விபத்திற்கு பின்னர் சட்டவிரோதமாக குடியேற முயன்றவர்களை கியூபெக் மாகாண பொலிஸார் தேடி வருகின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4:15 மணியளவில், ஹெம்மிங்ஃபோர்டு, க்யூபெக்கின் ரூட் 202 மற்றும் மொன்டீ ஜாக்சன் சாலைகளின் சந்திப்பில் இந்த விபத்து நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது நியூயார்க் மாநில எல்லையிலிருந்து வெறும் சில கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

ஒரே வாகனத்தில் பயணம் செய்த 10 முதல் 12 ஆவணமில்லாத குடியேறிகள், வேறு ஒரு SUV வாகனத்துடன் மோதியபோது, அவர்கள் வந்த வாகனம் குடைசாய்ந்துள்ளது.

வாகனத்தில் பயணம் செய்த முழுமையான எண்ணிக்கை இன்னும் உறுதியாகவில்லை. 6 முதல் 8 பேர் தப்பி ஓடிவிட்டனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இன்னொரு SUV-வில் பயணித்த 48 வயதுடைய அமெரிக்கக் குடிமகன் மதுபோதையில் வாகனம் ஓட்டியதாகக் கூறப்படுகிறது. அவரை கைது செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அந்த வாகனத்தில் குறைந்தது ஒரு பயணி இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

விபத்தில் நான்கு பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களின் நிலை அபாயமில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு...

( C01 தொடர்ச்சி)

குறித்து ஆளுநர் கவலை தெரிவித்தார்.

போர் காரணமாக ஆவணங்கள் அழிந்தமை மற்றும் கூகுள் வரைபடத்தின் அடிப்படையில் வனத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட நில அளவைகள் போன்றவை நில உரிமைப் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கான தீர்வுக்கான தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து அவர் தூதுவருக்கு விளக்கமளித்தார். இதுபோன்ற பிரச்சினைகள் வடக்கிற்கு மட்டும் அல்லாமல் நாட்டின் பல பகுதிகளிலும் காணப்படுவதாக தூதுவர் பதிலளித்தார்.

மேலும், 2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் இன்னும் நிறைவடையவில்லை என்றும், அதனை முழுமைப்படுத்துவதற்காக மேலதிக உதவிகள் தேவைப்படும் என்றும் ஆளுநர் தெரிவித்தார். பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பலர் உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடுகின்றனர் என்பதையும், அவர்களுக்கு ஏற்றுமதி சந்தைகளை உருவாக்கிக் கொடுக்க உதவி தேவை என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

வேலைவாய்ப்பு பற்றாக்குறை ஒரு முக்கிய சவாலை உருவாக்குகிறது என்றும், விவசாய மற்றும் கடல் உற்பத்திகளை மூலப் பொருட்களில் இருந்து பெறுமதி சேர்த்த உற்பத்திகளாக மாற்றும் தொழிற்சாலைகள் வடக்கில் அமைக்க கனேடிய வாழ் மக்களை முதலீடு செய்ய ஊக்குவிக்க வேண்டும் என்றும் ஆளுநர் கோரிக்கை வைத்தார்.

அத்துடன், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விரிவாக்கம், வடக்கு முதலீட்டு வலயங்கள் போன்ற முன்னேற்றத் திட்டங்கள் பற்றியும் தூதுவர் ஆர்வத்துடன் கேட்டறிந்தார்.

இந்தச் சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் மு. நந்தகோபாலன், இணைப்புச் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.